

உதகை கிழக்கு நகர தி.மு.கழக நிர்வாகிகள் மற்றும் கிளைச் செயலாளர்கள், பிரதிநிதிகள் கூட்டம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. உதகை கிழக்கு நகரக் கழக செயலாளர் எஸ்.ஜார்ஜ் தலைமை வகித்தார். இதில் கழகப் பிரதிநிதி தலைமை பொதுக்குழு உறுப்பினர் எச்.மோகன் குமார் கலந்து கொண்டு சிறப்பித்தார். இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் ஜே. ரவிக்குமார் ஜெயகோபி, கார்டன் கிருஷ்ணன், இச்சு பாய், அணில் குமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் தலைமைக் கழக ஆணைக்கிணங்க, உதகை கிழக்கு நகரத்தில் உள்ள வார்டு கிளை கழக செயலாளர்கள், பிரதிநிதிகளுடன் கழக வார்டு மறு சீரமைப்பு மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இதில் கழக நிர்வாகிகள், கிளைக் செயலாளர்கள், பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் இன்னாள் நகர மன்ற உறுப்பினர் கள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தமிழ்நாட்டை படுகுழியில் தள்ளிய

த.வெ.க. அரசுக்கு எதிராக தாம்பரத்தில் 5 ஆயிரம் மகளிர் கண்டன முழக்கம்!

மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் – சேலம் சுஜாதா கண்டன உரை!

ஏ.மணி, நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம்,எம்.கே.டி.கார்த்திக்,

பகுதி கழகச் செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், வே.கருணாநிதி, த.ஜெயக்குமார், இ.ஜோசப் அண்ணாதுரை, இ.எஸ்.பெர்னாட், பெருங்களத்தூர் சேகர், மாடம்பாக்கம் ஆ.நடராஜன், செம்பாக்கம் சுரேஷ், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் ஆகியோர் உட்பட 5,000-க்கும் மேற்பட்ட காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மகளிர் அணியினர் கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் அணி திரண்டு வந்து கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தின் காரணமாக தாம்பரம் மாநகரமே ஸ்தம்பித்தது. தாம்பரம் சண்முகம் சாலை முழுவதும் மகளிர் அணியினர் திரண்டு வந்ததால் கூட்டம் பார்க்கக் கண்கொள்ளா காட்சியாக இருந்தது.

காஞ்சிபுரம், நவ.3-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி சார்பில் தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தாம்பரத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் - கழக மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மகளிர் அணி நிர்வாகிகள் அணி திரண்டு பங்கேற்று கண்டன முழக்கமிட்டனர்.

த.வெ.க. ஆட்சியில் விலைவாசி உயர்வு, போதைப்பொருள் விற்பனை, கொலை, கொள்ளை, பெண்களுக்கு எதிரான வன்முறை, குழந்தைகள் கடத்தல் என பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க. அரசைக் கண்டித்து, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி சார்பில், 31.10.26 அன்று காலை 10.00 மணியளவில் தாம்பரம் சண்முகம் சாலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் உதயா கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ச.சசிகலா அனைவரையும் வரவேற்று பேசினார்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து கழக மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா கண்டன உரை ஆற்றினார்.

மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் கே.சி.சந்தியா, கலைவாணி, மீரா, வளர்மதி, விஜய லட்சுமி, பாண்டிச்செல்வி, மலர்விழி, சத்தியா, சரளா, தமிழரசி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள் கல்யாணி ராமகிருஷ்ணன், நளினி, செண்பகவல்லி, சந்தியா செந்தில், விஜய லட்சுமி, சாந்தி, கலாவதி, தனலட்சுமி, வெற்றிசெல்வி, தாம்பரம் மாநகர மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

மாவட்டக் கழகத்துணைச் செயலாளர் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, செங்கல்பட்டு நகர மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன் ஆகியோர் கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

முடிவில் தாம்பரம் மாநகர மகளிர் அணி அமைப்பாளர் ரமணி ஆதிமூலம் நன்றியுரை ஆற்றினார்கள்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகர துணை மேயர் கோ.காமராஜ்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், வீ.தமிழ்மணி, எல்.இதயவர்மன், ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி, ந.கோபால், ஏ.வந்தேமாதரம், பி.சந்தானம், ஜி.கே.ரவி,

மோசமான சிறை வசதிகள் – கைதிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்: தேனி சிறையில்

கைதி ஒருவர் மீண்டும் பிடிபடுவதற்கு முன்பு வெளியிட்ட காணொளி!

தப்பியவர்கள் 21 கைதிகளா என சர்ச்சை!

தேனி, நவ. 3 -

தேனி சிறை உடைப்பின்போது தப்பி ஓடிய கைதி ஒருவர், மீண்டும் பிடிபடுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு வெளியிட்ட காணொளி ஒன்று சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. தெக்கம்பட்டி துணைச் சிறையில் மன உளைச்சல், மோசமான சிறை வசதிகள் மற்றும் கைதிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் இருப்பதாக அந்தக் காணொளி யில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. கொலைக் குற்ற வாளியான 26 வயது மீனாட்சிசுந்தரம், அந்தக் காணொளியில், '21 கைதிகள்' நீதியிலிருந்து தப்பிப் பதற்காக அல்ல, மாறாக தங்கள் குறைகளை ஒரு நீதிபதியிடம் தெரிவிப்ப தற்காகவே துணைச் சிறை யிலிருந்து தப்பி ஓடியதாகக் கூறியுள்ளார்.

குறைகளை நீதிபதிகளிடம் விளக்கவே தப்பித்தோம்!

"யாருக்கும் எந்தப் பிரச்சினையையும் உருவாக்குவதற்காக நாங்கள் சிறையிலிருந்து வெளியே வரவில்லை. 21 கைதிகளும் இந்தப் பிரச்சினை குறித்து விவாதித்து, கூட்டாக வெளியேற முடிவு செய்தோம். சிறைக்குள் நாங்கள் எதிர்கொண்ட சிரமங்களை ஒரு நீதிபதியிடம் விளக்கி, நீதிமன்றத்தில் சரணடைவதே எங்கள் நோக்கமாக இருந்தது," என்று அவர் அந்த வீடியோவில் கூறினார். கைதிகள் தொடர்ச்சியான மன உளைச்சலுக்கு ஆளாக்கப்பட்டதாக அவர் கூறினார். சிறைக் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் அளிக்கப்பட்ட புகார்களுக்கு எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்றும், உணவு மற்றும் பிற அடிப்படை வசதிகள் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருந்தன என்றும் அவர் கூறினார்.

மன உளைச்சலால் அழுத்தப்பட்டோம்!

கைதிகள் பார்வையாளர்களைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார். "நாங்கள் எங்கள் குறைகளை வெளிப்படுத்திய போதெல்லாம், நாங்கள் அழுத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டோம் மற்றும் தண்டனை வழங்கப்படும் என அச்சுறுத்தப்பட்டோம்," என்று அவர் கூறினார்.

சிறையில் தனது பாதுகாப்புக்கு அஞ்சியதால் தப்பித்ததாக மீனாட்சி சுந்தரம் கூறினார். கருணை கோரி, "என் தவறுகளால் என் மனைவியும், பிறக்காத என் குழந்தையும் பாதிக்கப்படக்கூடாது. நான் ஒரு சீர்திருத்தப்பட்ட வாழ்க்கையை வாழ விரும்புகி றேன்," என்று அவர் கூறினார். சிறைத் தப்பித்தலில் தனது தம்பிக்குத் தொடர்பு இல்லை என்றும் அவர் மறுத்தார்.

புழுப் பிடித்த உணவு பரிமாறப்பட்டது!

தேனி சிறையின் நிலைமைகள் குறித்து இந்தக் காணொளி ஒரு விவாதத்தைத் தூண்டியுள்ளது. அவரது தாயார் ஆறுமுகத்தம்மாள், சகோதரர்கள் மீது குற்ற வழக்குகளில் பொய்யாகச் சிக்கவைக்கப்பட்டதாகவும், புழு பிடித்த உணவு பரிமாறப்பட்டதாகவும், தாக்கப்பட்டதாகவும் குற்றம் சாட்டி, முதலமைச்சர் சி.ஜோசப் விஜயிடம் மனு அளித்துள்ளார். மேலும், இருவரும் மீண்டும் பிடிபட்ட பிறகு சித்திரவதை செய்யப்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். தற்போது இருவரும் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், காவலில் நடந்ததாகக் கூறப்படும் வன்முறை குறித்து உடனடி மருத்துவ கவனிப்பும் நீதி விசாரணையும் நடத்தப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் காணொளி குறித்துப் பதிலளித்த மூத்த காவல்துறை அதிகாரி ஒருவர், இந்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று டைம்ஸ் ஆஃப் இந்தியாவிடம் தெரிவித்தார். "அவர்கள் பொய் சொல்கிறார்கள். சிறை உடைப்பு நடந்த நாளன்றுகூட, ஒரு நீதிபதி துணைச் சிறைக்கு வருகை தந்தார். கைதிகளுக்கு ஏதேனும் கவலைகள் இருந்திருந்தால், அவர்கள் அதை நீதிபதியிடம் தெரிவித்திருக்கலாம்," என்று அந்த அதிகாரி கூறினார். சிறையிலிருந்து 17 கைதிகள் அல்ல, 21 கைதிகள் தப்பிச் சென்றதாகக் கூறப்படும் கூற்றுகளையும் அவர் நிராகரித்தார்.



வயது மூப்பு காரணமாக மறைவெய்திய கேரள மாநில திராவிட முன்னேற்றக் கழக பொறுப்புக் குழு உறுப்பினர் ஆர்.ரகுபதி உடலுக்கு கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் புதுக்கோட்டை கே.ஆர். முருகேசன் மலர்வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார். உடன் கேரள மாநில இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ், துணை அமைப்பாளர் விபின் முருகேசன், மாவட்டக் கழகச் செயலாளர் அனீஷ் மற்றும் கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; 200 ரூபாயோடு பையை எடுத்துகிட்டு கோ - ஆப்ரடிவ் கடைகளுக்கு லோ லோன்னு சுத்தி சுத்தி வர்றேன். எங்கேயுமே தீபாவளி பொருளே போடலியே. கேட்டா சிரிக்கிறாங்க!

போண்டி : ஆமாய்யா; சிரிக்கத்தான் செய்வாங்க. ஏதோ ஒரு இடத்துலே ஆடிட்டர் மந்திரி திட்டத்தை தொடங்கி வெச்சுட்டு "அங்கே இங்கேல்லாம் கிடைக்கும்" னு சொன்னா கிடைச்சிடுமா! இது என்ன தி.மு.க. கவர்ன்மென்ட்டா, சொன்னதை செய்யறதுக்கு. த.வெ.க. ஆட்சி. 30 ரூபாய் அரிசி என்னாச்சி? ரேஷன் வெங்காயம் என்னாச்சி? எல்லாமே 'ஸ்டண்ட்' யா!

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(1.11.2026)

மக்கள் விரோத விஜய் ஆட்சியில் இன்றைய (02.11.2026) நாளிதழ்கள் மற்றும் ஊடகங்களில் வெளிவந்த கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பாலியல் சீண்டல் உள்ளிட்ட மற்றும் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு செய்திகளில் ஒரு சில செய்திகள் மட்டும் மக்கள் பார்வைக்காக...



1. தூத்துக்குடி தாளமுத்து நகரில் பேனர் வைத்தது தொடர்பாக ஏற்பட்ட தகராறில் விடுதலைச் சிறுத்தை கட்சிப் பிரமுகர் சரமாரியாக வெட்டிக் கொலை ....

2. சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே கள்ளக்காதலியை துப்பட்டவால் கழுத்தை இறுக்கி கொலை செய்த கள்ளக்காதலன்....

3. நெல்லை மாவட்டம் நாங்குநேரி அருகே சொத்து தகராறு காரணமாக முதியவரை அறிவாளால் வெட்டிக் கொலை செய்த வாலிபர்....

4. திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே கொடுமாம்பள்ளியில் இறுதிச் சடங்கில் ஏற்பட்ட தகராறில் வெளிநாட்டில் இருந்து வந்த வாலிபர் சரமாரியாக அடித்துக் கொலை...



5. வேலூர் மாவட்டம் காட்பாடி அருகே மேல்பாடி கிராமத்தில் பொன்னை ஆற்று கரையோரத்தில் சரமாரியாக அடித்துக் கொலை செய்யப்பட்ட முதியவர் உடல் சிக்கியது ....

6. திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே சூளேஸ்வரன் பட்டியில் பேரூராட்சி பொதுக்கழிப்பறையில் ஊழியர்கள் அடைப்பை நீக்கிய போது ஆறு மாத ஆண் குழந்தை பிணமாக மீட்பு....

7. சென்னையை அடுத்த எண்ணூர் தாழங்குப்பம் பகுதியில் 7 வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த முதியவர்.....

8. வேலூர் அருகில் 13 வயது சிறுமியை கட்டாயத் திருமணம் செய்து கர்ப்பம் ஆக்கிய வாலிபர்...



9. பெரம்பலூர் மாவட்டம் வெங்கலம் கிராமத்தில் 11 வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த 58 வயது முதியவர்...

10. நாகப்பட்டினம் அரசுக் கல்லூரியில் படிக்கும் 17 வயது மாணவியை பலாத்காரம் செய்து கர்ப்பம் மாக்கிய வாலிபர்....

11. சென்னை காவாங்கரையில் எட்டு வயது பள்ளிச் சிறுமியிடம் சில்மிஷத்தில் ஈடுபட்டு சிக்கிய ஆட்டோ டிரைவர், போலீஸ் பிடியில் இருந்து தப்பி ஓட்டம் ...

12. திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அருகே இருசக்கர வாகனத் திருட்டு வழக்கில் பிடிபட்ட கைதி காவல் நிலையத்தில் இருந்து தப்பி ஓட்டம் ....

13. தமிழ்நாட்டில் தொடரும் மின்தடை, செங்குன்றம் பகுதியில் பொதுமக்கள் சாலை மறியல் ...

14. கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் அருகே இருசக்கர வாகனத்தில் விபத்தை ஏற்படுத்திய பட்டியலின வாலிபரை மண்டியிட்டு மன்னிப்புக் கேட்க வைத்த வீடியோ வைரல் ...

15. சென்னையில் களை கட்டும் கஞ்சா வியாபாரம், பேசின் பிரிட்ஜ், வியாசர்பாடி, பெரம்பூர், தாம்பரம் உள்ளிட்ட பகுதிகளில் கஞ்சா சிக்கியது, இரண்டு பேர் கைது....

16. குன்றத்தூர் அடுத்த கெருகம்பாக்கத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் த.வெ.க. அமைச்சர் மற்றும் எம்.எல்.ஏ. கோஷ்டிகள் மோதல், வாக்குவாதம் கைகலப்பு ஏற்பட்டதால் பரபரப்பு..



17. ராஜபாளையத்தில் இருந்து தென்காசி நோக்கி வந்த தனியார் பேருந்தை மதுபோதையில் ஆபத்தான முறையில் ஓட்டிய டிரைவரை கடையநல்லூரில் பொதுமக்கள் சிறை பிடித்ததால் பரபரப்பு ஏற்பட்டது....

18. கரூரில் சாலையில் நடந்து சென்ற பெண்ணிடம் 2 சவரன் நகை பறிப்பு. கடையில் பால் வாங்கிக் கொண்டு வீட்டிற்கு சென்றுகொண்டிருந்த பெண்ணிடம் செயின் பறிப்பு. இருசக்கர வாகனத்தில் மோதுவது போல வந்து 2 சவரன் நகையை பறித்துச் சென்ற மர்ம நபர்கள்.

19. திண்டுக்கல் மாவட்டம் பழனியில் சாலையில் நடந்து சென்ற மூதாட்டியிடம் 15 சவரன் நகை பறிப்பு. 70 வயதான மூதாட்டி ராஜாமணி கடைக்கு சென்று கொண்டிருந்தபோது, நகை பறிப்பு . மூதாட்டியை பின் தொடர்ந்து வந்த மர்ம நபர்கள் கழுத்திலிருந்த 15 சவரன் நகையை பறித்துச் சென்றனர் . பொதுமக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியில் நடைபெற்ற துணிகர நகை பறிப்பு சம்பவத்தால் பொதுமக்கள் அதிர்ச்சி.